தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. நிலைமை தற்பொழுது அமைதியாக உள்ளது. எனவே, இந்தப் பிரச்னை குறித்து மேலும் விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்துள்ள கருத்துக்களின் அடிப்படையிலே நியாயம் வழங்குவதற்கும், தொடர்ந்து அமைதி காப்பதற்கும், இந்த மாச்சர்யங்களின் விளைவாக எதிர்காலத்திலே அமைதிக்குப் பங்கம் நிகழாத முறையிலே நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக்கொள்ளும் என்ற உறுதியைக் கூறுகிறேன். ஆகவே இந்த அளவிலே கருத்துக்களை எடுத்துச் சொன்னபிறகு, சபையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து மேலும் விவாதிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரி.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

"திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரியில் இட வசதியில்லாததாலும், வகுப்பறைகளில் போதிய மேசை, நாற்காலிகள் இல்லாததாலும் மாணவர்கள் அவதிப்படுவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருவாரூர் அரசினர் கலைக்கல்லூரியில் மாணவர் அமைதியின்மை குறித்து அரசால் பெறப்பட்ட தகவல்கள் பின் வருமாறு:

திருவாரூர் அரசினர் கலைக் கல்லூரியில் உள்ள பெரிய வகுப்பறைகளைத் தடுத்து கூடுதல் அறைகள் (Partition) ஆக்குவதற்குக் கல்லூரி முதல்வரால் அனுமதி பெறப்பட்டுள்ளது. வேலை இன்னும் ஒரு வாரத்தில் ஆரம்பிக்கப்படும். இது முடிந்த பின் வகுப்பறைகள் கூடுதலாக இருக்கும். கல்லூரியில் மேஜை, நாற்காலி முதலிய தட்டுமுட்டு சாமான்கள் பற்றாக் குறையில்லை என்று முதல்வர் அறிவித்துள்ளார். குறிப்பிடத்தக்க வகையில் இக்கல்லூரியில் மாணவர் கிளர்ச்சி இப்போது ஏதுமில்லை.

(மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் தலைமை)

திரு. எம் எஸ். மாணிக்கம்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரியின் வகுப்பறைகளைத் தடுத்து அதிக வகுப்புகளை உருவாக்குவதாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்தக் கட்டிடம் இப்போது போதுமான அளவு இல்லாததால் புதிய கட்டிடம் கட்டப் பட்டால்தான் வருங்காலத்தில் மாணவர்களை அதிகமான அளவுக்குச் சேர்த்துக் கொள்ள இயலும். இப்போது குறைவான மாணவர்கள்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பல வகுப்புகளைத் துவக்க புதிய கட்டிடத்தைக் கட்டியாகவேண்டும். மேலும் மாணவர்களுக்கு வேண்டிய வசதிகள் இல்லை. அதையும் உருவாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்போதுள்ள தேவைகளுக்கேற்ப முடிந்த அளவுக்கு வசதிகளைச் செய்திருக் கிறோம். எதிர்காலத் தேவைகளுக்கு வேண்டிய திட்டங்களைப் பின்னால் நாம் பரிசீலிக்கலாம்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: கட்டிட வசதி இல்லாததால் புதிய வகுப்புகள் துவங்க முடியாமல் இருக்கின்றன. கிழக்கு தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் ஒரே கல்லூரி அந்த அரசினர் கல்லூரி. ஏழை மாணவர்கள் படிக்க இருக்கும் ஒரே கல்லூரி அது. அந்தக்கல்லூரியை விரிவுபடுத்துவதற்கு புதிய கட்டிடம் கட்டப் படவேண்டும். ஆகவே, அடுத்த ஆண்டு புதிய வகுப்புகளைத் துவக்க புதிய கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கல்லூரி முதல்வர் அவர்களிடமிருந்து அப்படி ஒரு கோரிக்கை வருமானால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

(ஆ) வேடசந்தூர் பாளையம் பகுதியில் அரசு சிமெண்ட் தொழிற்சாலை.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''வேடசந்தூர் பாளையம் பகுதியில் அரசு சிமெண்ட் தொழிற் சாலையை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ள பகுதிகளில் தனியார் சிமெண்ட் நிறுவனம் நிலங்கள் வாங்குவது குறித்த'' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.